1978 மார்ச் 7]

விசைச் சாயச்சாலை.

*440 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் ஒரு விசைச் சாயச்சாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அது எந்த மாவட்டத்தில் நிறுவப் படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) மூன்று விசைச் சாயச்சாலைகள் வட ஆற்காடு, செங்கற் பட்டு கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நிறுவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஐந்து நவீன சாயச்சாலைகளை சேலம், கோவை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங் களில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, இந்த பவர் டையிங் பாக்டரியிலே செயல்படுத்தப்படும் துணிகள் தரமுள்ளவைகளாக இருக்கின்றனவா ? அப்படிப்பட்ட துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ? வெளி நாடுகளிலே அதற்கு மார்க்கெட் எப்படியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செமி ஆட்டோமேடிக் டையிங் யூனிட் என்று சொல்லப்படுகின்ற இந்த நவீனப்படுத்தப் பட்ட சாயத் தொழிற்சாலையை நிறுவியதன் நோக்கமே, கைத்தறித் துணிகள் காலப்போக்கிலே வெளுத்து விடுகின்றன என்று புகார் வரக்கூடாது. அதிலே குறை ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில்தான் இந்த அரசு, கைத்தறி நெசவாளர்கள் இருக்கும்படியான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட நவீன சாயத் தொழிற்சாலைகளை

நிறுவுவதற்கான திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, இன்றைக்கு மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்ற துணிகள் தரமுள்ளவைகளாக இருக்கின்றன. குறுகிய காலத்திற்குள் 6, 7 மாதங்களுக்குள் இந்த அரசு 2 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உறையூர் பகுதியில் நெய்யப்படுகின்ற புடவைகள் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட புது டையிங் பாக்டரியை அங்கே நிறுவினால், அங்கிருக்கக்கூடிய நெசவாளர்கள் பயனடைவார்கள். எனவே, விரைவிலே அத்தகைய பாக்டரி ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய நவீன சாயத் தொழிற்சாலையை அந்தந்தப் பகுதிகளிலே நிறுவுவதன் மூலம் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையும் இந்தச் சாயத் தொழிற்சாலையிலே தங்களுடைய நூலைச் சாயப்படுத்திக் கொள்ள வேண்டும். உறையூரிலே மிகச் சிறந்த சேலைகள் நெய்யப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். திருச்சியிலே இந்த நவீன சாயத் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. அது விரைவிலே செயல்படும். எனவே, அந்தப் பயனை உறையூர் மக்களும் பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்தப் புதிய சாயத் தொழிற்சாலையை கைத்தறி, பட்டுக்குப் பெயர்போன காஞ்சீபுரம் நகரிலே அமைப்பதற்கு இந்த அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே செங்கற்பட்டு மாவட்டத்தையும், அதிலே இணைத்திருக்கிறேன். செங்கற்பட்டு

1978 மார்ச் 7]

மாவட்டம் வருகின்றபோது, காஞ்சீபுரத்தை மறந்துவிட முடியாது. எனவே, நிச்சயம் அத்தகைய கருத்தைச் செயல்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விசைச் சாயச் சாலையைப் பல்வேறு மாவட்டங்களிலே தொடங்க ஏற்பாடு செய்ய இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை எப்போது ஏற்படுத்த இருக்கின்றார்கள்? அந்தத் தொழிற்சாலைகளை எந்தெந்த மாவட்டங்களில் அமைக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நவீன சாயச் சாலைகளை எங்கெங்கு அமைக்கிறோமோ அங்கெல்லாம் பிரிண்ட் போடக் கூடிய தொழில்களை இணைத்து அமைப்பதன் மூலமாக நெசவாளர்களுக்கு நன்மை கிடைக்குமென்று இந்த அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் ஏற்கெனவே சேலத்தில் நாம் இந்த முயற்சியில் பெரிதும் ஈடுபட்டு இருக்கிறோம். அது வெற்றிகரமாகச் செயல்பட ஆரம்பித்தால், வேறு சில இடங்களிலும் இதனை விரிவுபடுத்தும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். கணேசன் : சேலைகளில் மிகுந்த பிரசித்தி பெற்றது கொரநாட்டுச் சேலை. எனவே, மாயூரத்தில் இருக்கும் கொரநாட்டில் பவர் டையிங் பாக்டரியை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நவீன சாயச் சாலைகளை நிறுவுவதற்குக் குறைந்தபட்சம் பத்தாயிரம் உறுப்பினர்கள் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கவேண்டும்; அதைப் போல் நூற்பாலைகளில் இருந்து எடுத்து வருகின்ற நூல்கள் சாயச் சாலைகளுக்குப் பொருந்துவனவாகப் பக்கத்தில் தயாரிக்கப்படுவதாக இருக்கவேண்டும். மூன்றாவது தண்ணீர் வசதி நிரம்ப இருக்க வேண்டும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து நவீன சாயச் சாலைகளை நிறுவ வேண்டுமென்ற திட்டத்தைத் தயாரித்து வருகிறோம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்துகிற சாயச் சாலைகளில் தனியார் சாயச் சாலைகளைவிட அதிக சாயக் கூலி இருப்பதால், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கச் சாயச் சாலைகளில்தான் சாயம் போட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால் அவர்களுடைய ப்ரொடக்ஷன் காஸ்ட் அதிகமாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது நவீன சாயத் தொழிற்சாலை. நவீனப்படுத்துகிறபோது இந்தக் குறைபாடுகள் இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

(2) தகவல் கோரல்.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழாசிரியர் கோரிக்கை பற்றி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. க. சுப்பு : ஏற்கனவே நான், இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 தமிழாசிரியர்களை பணிக்குத் திரும்பவும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கைபற்றி நான் 57-வது விதியில் ஒரு நோட்டீஸ் கொடுத்தேன் ; 42வது விதியிலும் ஒரு நோட்டீஸ் பெண்டிங் ஆக இருக்கிறது. இதற்கிடையே சாதகமான ஒரு முடிவை அரசு எடுத்து அது பத்திரிகையில் வந்திருக்கிறது. சட்டமன்றத்தில் சொல்லாமல் பத்திரிகையில் வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருப்பார்களானால் அவர்களுடைய உண்ணாவிரதம் கூட நீடித்திருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 82ன் கீழாவது ஒரு ஸ்டேட்மெண்டை அளிக்க முன்வருவார்களா ?